ஆண்டறிக்கை

2022

# இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை

2022 ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு

**சவால்கள், கொள்கைகள் மற்றும் தோற்றப்பாடு**

முனைவர் (திருமதி) சுஜீதா ஜெகஜீவன்
மேலதிகப் பணிப்பாளர் – பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2023 மே 12




## நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 35

...நிதியியல் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய மீளாய்வு மற்றும் அத்தகைய கொள்கைகளையும் வழிமுறைகளையும் தூண்டிய பொருளாதார மற்றும் நிதியியல் சூழ்நிலைகள் என்பன பற்றிய பகுப்பாய்வுகள் மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் நாணயச் சபையானது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குச் சமர்ப்பித்து வெளியிடுதல் வேண்டும்...

# ஆண்டறிக்கையின் உள்ளடக்கம்




| | | | |
|---|---|---|---|
| தொகுதி 1 | பகுதி I | - | பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்<br>புள்ளிவிபரப் பின்னிணைப்பு<br>சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு |
| தொகுதி 2 | பகுதி II | - | இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் |
| | பகுதி III | - | ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச் சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள் |
| | பகுதி IV | - | 2022ஆம் ஆண்டின் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள் |

இலங்கைப் பொருளாதாரம் அதன் சுதந்திரத்திற்குப் பின்னைய வரலாற்றில் எதிர்நோக்கிய மிகக் கடினமான ஆண்டாக 2022 காணப்படுகிறது...

- வேகமாக சீர்குலைந்து வந்த பொருளாதார நிலைமைகள் மேலும் மோசமடைவதனைத் தடுப்பதற்குரிய **உடனடியானதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான** கொள்கை முன்னெடுப்புக்களைத் தேவைப்படுத்தின

- சரிசெய்யும் வழிமுறைகள் **அண்மிய காலத்தில்** பரந்தளவிலான குடிமக்களைப் **பாதித்திருக்கின்றதெனினும்**, கட்டுப்பாடற்ற பொருளாதார **உறுதிப்பாடற்ற தன்மைகளின்** பேரழிவுதரும் விளைவுகளிலிருந்து பொருளாதாரத்தினையும் மக்களையும் **பாதுகாத்துக் கொள்வதற்கு** இவை அவசியமாகக் காணப்பட்டன

- இம்முயற்சிகளின் எதிர்பார்க்கப்பட்ட **பெறுபேறுகள்** 2022இன் பிற்பகுதியிலிருந்து **கைகூடத்** தொடங்கியமையின் மூலம் சமூகப் பொருளாதார **உறுதிப்பாடு** மீண்டும் அடையப்படுவதற்கு உதவுகின்றன

- நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதில் **சவால்கள்** தொடர்ந்தும் காணப்படவே செய்கின்றன

[Limited Sharing]

# 2022இல் உண்மைப் பொருளாதாரம் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து முன்னொருபோதுமில்லாத ஆழமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தது...

*2022இல் சுருக்கம் தொடர்ந்தும் பரந்த அடிப்படையில் காணப்பட்டது...*

உண்மை மொ.உ.உ

**2021இன் 3.5 சதவீதம்** கொண்ட **வளர்ச்சியுடன்** ஒப்பிடுகையில்

**2022இல் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது**

| துறை | மாற்றம் | விவரங்கள் |
|---|---|---|
| பணிகள் | -2.0% | உண்மைச் சொத்து நடவடிக்கைகள் => -12%<br>நிதியியல் பணிகள் => -11%<br>காப்புறுதி => -47% |
| கைத்தொழில் | -16.0% | கட்டுமானம் => -21%<br>தயாரிப்பு => -13% |
| வேளாண்மை | -4.6% | நெற்செய்கை => -13%<br>தேயிலை வளர்ப்பு => -16%<br>விலங்கு உற்பத்தி => -13% |
| உதவுதொகை கழித்த வரிகள் | -27.1% | |

**பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவு (ஐ.அ.டொலர் பில்.)**

| 2021 | | 2022 |
|---|---|---|
| 88.5 | -12.9% | 77.1 |
| தலைக்குரிய மொ.உ.உ ஐ.அ.டொ 3,997 | | தலைக்குரிய மொ.உ.உ ஐ.அ.டொ 3,474 |

[Limited Sharing]

# பணவீக்கம் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தது...



பணவீக்கம் (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டது) 2022 செத்தெம்பரில் **வரலாற்றிலேயே மிக உயர்ந்த** மட்டமான **69.8%** இனை அடைந்தது

- *இலங்கை ரூபாவின் தேய்வு*
- *வழங்கல் பற்றாக்குறை*
- *பாரிய நாணய நிதியிடல்*
- *உலகளாவிய வலு மற்றும் உணவுப் பணவீக்கம்*

*என்பன பணவீக்கத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புடன் சமூகத்தின் அனைத்து அம்சங்களின் மீதும் தாக்கங்கள் எதிரொலிக்கப்படுவதற்கு காரணமாகின*

| ஆண்டிற்காண்டு (கொநுவிசு, 2013=100) | 2021 திசெ | 2022 செத் |
|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் | 12.1% | 69.8% |
| மையப் பணவீக்கம் | 8.3% | 50.2% |
| உணவுப் பணவீக்கம் | 22.1% | 94.9% |
| உணவல்லாப் பணவீக்கம் | 7.5% | 57.6% |



**உயர் பணவீக்கம் மற்றும் உறுதிநிலைப்படுத்தப்படாத பணவீக்க எதிர்பார்ப்புக்கள்**

[Limited Sharing]

# 2022இல் வெளிநாட்டுத் துறை கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களை எதிர்கொண்டது…



வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை வறிதடைந்து, அத்தியவசிய பொருட்களின் பற்றாக்குறைகளுக்குக் காரணமாகியது

## தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தன



**ஐ.அ.டொ. 205 மில்**
2022 பெப்புருவரியில்

**ஐ.அ.டொ. 585 மில்**
2018 (மாதாந்தச் சராசரி)

## வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது

**1.1**
ஐ.அ.டொ. பில்
(2021 திசெ)



ஐ.அ.டொ 781 மில் (சராசரி)
*2022 சன–ஏப்பிறல்*

## சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன

**ஐ.அ.டொ. 41 மில்**
2022 செத்



**ஐ.அ.டொ. 365 மில்**
2018 (மாதாந்தச் சராசரி)

## பயன்படுத்தத்தக்க அலுவல்சார் ஒதுக்குகள் *மிகவும் தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன*



**ஐ.அ.டொ. 20மில்**
2022 ஏப்

## வெளிநாடு நாணயப் படுகடன் தீர்ப்பனவுகள் அதிகரித்தன

| | ஐ.அ.டொ பில் |
|---|---|
| 2021: | 6.8 |
| 2022 (எறிவு)*: | 7.6 |
| 2022: கா1: | 2.5 |
| 2022: கா2-கா4: | 0.7 |

*படுகடன் இடைநிறுத்தப்படும் அறிவித்தலுக்கு முன்

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்தன



**ஐ.அ.டொ. 1.7 பில்**
2022 ஒத்




செலாவணி வீதம் அளவிடப்பட்ட சீராக்கமொன்றிற்கு அனுமதிக்கப்பட்டது

சந்தை ஊகம் பாரிய மிகை நடவடிக்கைகளுக்குக் காரணமாகியது

**44%**
தேய்வு இல.ரூபா/ஐ.அ.டொலர்
மாச்சு 08 – மே 12 2022

# வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் வலு மற்றும் சக்தித் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை உயர்வடைந்து பொருளாதார நடவடிக்கைகளின் கணிசமான இழப்பிற்குக் காரணமாகியது…




- **2022இல் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடி கடுமையான சமூக வசதியீனங்களுக்கும் அமைதியின்மைக்கும் வழிவகுத்தது**
  - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நிலைமை மோசமடைந்தது
  - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை குறைவடைந்தது
- **பின்வருவனவற்றின் காரணமாக மக்கள் இருப்புக்களை அளவுக்கதிகமாகக் குவித்தமை மற்றும் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள்**
  - எரிபொருள் பங்கீட்டில் காணப்பட்ட முரண்பட்ட தன்மை
  - எரிபொருள் கிடைப்பனவில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமை

**2022இன் நாளாந்த மின்வெட்டுக்கள் (நிமிடங்கள்)**



[Limited Sharing]

# பல தசாப்தங்களாக விடாப்பிடியாகக் காணப்பட்ட இறைத் துறையின் சமநிலையற்றதன்மை தன்மை 2022இல் உச்சத்தை அடைந்தது...

மொ.உ.உற்பத்தியில் அரச அரசிறை

**8.2%**

**உலகில் மிகக் குறைந்த ஒன்று**

மொ.உ.உற்பத்தியில் அரச செலவினம்

**18.5%**

**செலவினம் தொடர்ந்தும் நெகிழ்ச்சியற்றதாகக் காணப்பட்டது**

மொ.உ.உற்பத்தியில் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை

**10.2%**

**20 ஆண்டுகளில் மூன்றாவது மிக அதிகமான பற்றாக்குறை**

மொ.உ.உற்பத்தியில் அரச படுகடன்

**113.8%**

**மத்திய அரசாங்கத்தின் படுகடன் உறுதியற்றதொரு மட்டத்தினை அடைந்தது**

2020 சனவரியில் ஆரம்பமான **பன்னாட்டுத் தரமிடல் முகவர்களின்** நாட்டிற்கான **கொடுகடன் தரம் குறைக்கப்படுதலானது** 2021இன் இரண்டாவது பின்னரைப்பகுதியிலிருந்து **2022இன் தொடக்கப்பகுதி வரை** தொடர்ச்சியாகத் **தீவிரமடைந்தமையின் காரணமாக வெளிநாட்டு நிதியிடலுக்கான அணுகுவழிகள் தடைப்பட்டன**

[Limited Sharing]

# நாணயத் துறைச் செயலாற்றமும் நெருக்கடியின் தாக்கத்தினையும் எடுக்கப்பட்ட சீராக்க வழிமுறைகளையும் பிரதிபலித்தது...

- நாணய நிதியிடல் அதிகரித்தது
- வங்கித்தொழில் முறைமையினால் வழங்கப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடன் விரிவடைந்தது

இலங்கை மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன்

*2021 இறுதியில்* **1.2** ரூ. றில்

*2022 இறுதியில்* **1.3** ரூ. றில்

தனியார் துறைக்கான கொடுகடன் 2022 யூனிலிருந்து தொடர்ச்சியாகச் சுருக்கமடைந்தது

**ரூ. -494 பில்**

*(22 யூன் - 23 பெப்)*

மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் எதிர்க்கணியத்திற்குத் திரும்பியதுடன் மிகக் குறைந்த மட்டங்களை பதிவுசெய்தது

*2022 இறுதியிலுள்ளவாறு*

**-1.6** ரூ. றில் ≈ **-4.4** ஐ.அ.டொ. பில்

சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது வரலாற்றிலேயே மிக உயர்ந்த வீதத்தை அடைந்தது

**29.7 %**

*2022 நவெ*

அரச பிணையங்கள் மீதான விளைவுகள் அசாதாரண முறையில் உயர்ந்த மட்டங்களுக்கு அதிகரித்தது

**33.1%**

*2022 - நவெ (91 நாள் திறைசேரி உண்டியல்கள்)*

[Limited Sharing]

# நிதியியல் முறைமையானது சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிக ஆழமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தோன்றிய பாதிப்புக்களுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருந்தது...

## வங்கித்தொழில் துறை

**கொடுகடன் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை, திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், குறைவான இலாபத்தன்மை** மற்றும் **தேய்வடைந்துவரும் மூலதன மட்டங்கள்** என்பனவற்றிலிருந்து தோன்றிய அச்சமூட்டும் சவால்களை வங்கித்தொழில் துறை எதிர்கொண்டது...

| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முன்) | செயற்படாக் கடன் (%)[அ] |
|---|---|
| 1.0% ▼ | 11.3% ▲ |
| 2021: 1.4% | 2021: 7.6% |

| மூலதனப் போதுமை (%) | கொடுகடன் வளர்ச்சி (%) |
|---|---|
| 15.3% ▼ | 5.7% ▼ |
| 2021: 17.9% | 2021: 14.5% |

(அ) மொத்தக் கடனுக்கான கட்டம் 3 கடனினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் **கொடுகடன் வளர்ச்சியின் சுருக்கம், வீழ்ச்சியடைந்துவரும் இலாபத்தன்மை** மற்றும் **செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு** என்பனவற்றலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியில் தொழிற்பட்டன...

| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முன்) | செயற்படாக் கடன் (%)[ஆ] |
|---|---|
| 3.7% ▼ | 17.5% ▲ |
| 2021: 5.4% | 2021: 11.0% |

| மூலதனப் போதுமை (%) | கொடுகடன் வளர்ச்சி (%) |
|---|---|
| 22.0% ▲ | 5.0% ▼ |
| 2021: 17.0% | 2021: 9.9% |

(ஆ) மொத்தக் கடனுக்கான கட்டம் 3 கடனினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

...நிலையான வருமான பிணையங்களுக்கான உயர் விளைவு மற்றும் **எதிர்மறையான சந்தை மனோபாவம்** என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2022இன் **செயலாற்றம் வினைத்திறன் குன்றிக்** காணப்பட்டது...

| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்[இ] |
|---|
| -30.6% |

| எஸ்அன்ட்பி இலங்கை 20[இ] |
|---|
| -37.7% |

| சந்தை மூலதனமயமாக்கல்[இ] |
|---|
| -29.9% |

(இ) ஆண்டிற்கு ஆண்டு % மாற்றங்கள்

பொருளாதார நெருக்கடிகள் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கடுமையான பெரும் இடர்ப்பாடுகளுக்கு வழிவகுத்தன

# உயர்வடைந்து சென்ற பணவீக்கம் பொதுமக்களின் வாழ்க்கை நிலைமைகள் கடுமையாக தேய்வடையவும் வியாபாரங்கள் கணிசமானளவு இடர்ப்பாடுகளுக்குள்ளாவதற்கும் வழிவகுத்தது...

## அதிகரிக்கின்ற விலைகள்

2022ஆம் ஆண்டுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வகைகளின் மிக உயர்ந்த ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் (கொ.நு.வி.சு, 2013=100)

| | |
|---|---|
| எரிவாயு | 240% (ஓகத்) |
| தனிப்பட்ட போக்குவரத்துக்கான எரிபொருட்கள் | 207% (யூலை) |
| பாண் மற்றும் வெதுப்பக உற்பத்திகள் | 183% (ஓகத்) |
| வீதி வழிப் பயணிகள் போக்குவரத்து | 145% (ஓகத்) |
| வீட்டுத்துறையினைப் பேணுவதற்கான பொருட்கள் | 120% (ஓகத்) |
| நீர் வழங்கல் | 120% (ஒத்) |
| இறைச்சி | 119% (ஒத்) |
| தனிப்பட்ட சுகாதாரப் பொருட்கள் | 116% (திசெ) |
| மின்வலு | 114% (நவெ) |
| பழங்கள் | 108% (திசெ) |
| மீன் மற்றும் கடலுணவுகள் | 99% (செத்) |
| பால், வெண்ணெய்க்கட்டிகள் மற்றும் முட்டைகள் | 98% (ஓகத்) |
| வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுகள் | 97% (செத்) |
| தானியங்கள் மற்றும் ஏனைய உணவுகள் | 94% (யூலை) |
| அரிசி | 94% (செத்) |
| காய்கறிகள் | 90% (யூன்) |

வியாபாரங்களும் பொதுமக்களும் இன்றியமையாத பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பங்கீட்டு முறை, **உயர்வடைந்த வாழ்க்கைச் செலவு** மற்றும் **உற்பத்திச் செலவு,** நலன்புரி மற்றும் வாழ்வாதாரம் இழக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக கடுமையான இடர்ப்பாடுகளுக்குள்ளாகின.

## உயர் உற்பத்திச் செலவுகள்



## எதிர்க்கணியமான உண்மை வருமானம்




## வீழ்ச்சியடைகின்ற உண்மைக் கூலிகள்



### அரசதுறை

| பெயரளவு | உண்மை |
|---|---|
| ↑ 16.1% | ↓ 20.6% |



### முறைசார் தனியார் துறை

| பெயரளவு | உண்மை |
|---|---|
| ↑ 9.8% | ↓ 22.7% |



### முறைசாராத் தனியார் துறை

| பெயரளவு | உண்மை |
|---|---|
| ↑ 24.8% | ↓ 17.5% |

# நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட விரைவான அதிகரிப்புக்கள் பாதிக்கப்படக்கூடிய வீட்டுத்துறையினர் மீது கடுமையான பாதிப்புக்களைக் கொண்டிருந்ததுடன் ஏற்கனவே இருந்த வருமான ஏற்றுத்தாழ்வுகளை மேலும் மோசமாக்கின...

தேசிய வறுமைக் கோடு (ரூபா)




வறுமையை ஒழிப்பதில் இலங்கை அடைந்த முன்னேற்றமானது, பொருளாதார நெருக்கடியின் போது பல்வேறு துறைகளிலிருந்தும் தோன்றிய அதிகளவு பாதிக்கப்படும் தன்மையினால் தடைப்பட்டது

**வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்களின் அருந்தல்தன்மை சமூக துயரங்களுக்கு குறிப்பிடத்தக்களவிற்குக் காரணமாகியது**

*(மருந்தாக்கற்பொருட்கள், எரிபொருள், வாயு, உணவு விடயங்கள், கைத்தொழில் மூலப்பொருட்கள் போன்றவை)*







**கடுமையான பொருளாதார நெருக்கடிகள் பொதுமக்களின் எழுச்சி மற்றும் அரசியல் கிளர்ச்சிகள் ஆகிய இரண்டிற்கும் வழிவகுத்தது**

நம்பகமானதும் வெளிப்படையானதுமான கொள்கை வழிமுறைகள் நெருக்கடிகள் மேலும் மோசமடைவதனை தடுத்திருப்பதுடன் சமூகப் பொருளாதார உறுதிப்பாடு மீளெழுச்சியுறவும் உதவியிருக்கின்றன...

கேள்வியில் ஏற்பட்ட அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, பணவீக்க எதிர்பார்ப்புக்களை உறுதிநிலைப்படுத்தும் நோக்குடன் உத்வேகம்மிக்க தொடர்பூட்டல் உபாயத்தின் உதவியுடன் 2022 ஏப்பிறலில் மத்திய வங்கி **தீவிரமான** நாணயக் கொள்கை இறுக்கமாக்கலைப் பின்பற்றிய வேளையில்

பயன்படுத்தத்தக்க ஒதுக்குகளின் வறிதடைந்த மட்டங்களுக்கு மத்தியில் செலாவணி வீதத்தினை **உறுதிப்படுத்துவதற்கும்** நிதியியல் முறைமை **உறுதிப்பாட்டினைப் பேணுவதற்குமான** வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன...

# கட்டியெழுப்பப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு விரைவானதும் கணிசமானதுமான கொள்கை தலையீடுகளைத் தேவைப்படுத்தின ...




**பாரியதும் விடாப்பிடியானதுமான நாணயக் கொள்கையை இறுக்கமாக்கும் தேவை**

- உயர்வடைந்துவரும் பணவீக்க அழுத்தங்களையும் உள்நாட்டுப் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது அவை கொண்டிருக்கும் மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்துவதற்கு
- உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளை முடிவுறுத்துவதற்கு
- நிறுத்தப்படாத பணவீக்க எதிர்பார்ப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு
- எதிர்மறையான உண்மை வட்டி வீதங்களின் அளவினைக் குறைப்பதற்கு
- வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு
- வட்டி வீத அமைப்பில் காணப்படும் முரண்பாடுகளைச் சரிசெய்வதற்கு

# 2021 ஓகத்திலிருந்து நடைமுறையிலிருந்த இறுக்கமான நாணயக் கொள்கை நிலை 2022இன் தொடக்கப்பகுதியிலிருந்து மேலும் இறுக்கமாக்கப்பட்டது...

- **கொள்கை வட்டி வீதங்கள்:**

  **950** அடிப்படைப் புள்ளிகள் ↑ *(2022)*

  **100** அடிப்படைப் புள்ளிகள் ↑

  *(2023இன் இதுவரையான காலப்பகுதியில்)*

- **நியதி ஒதுக்கு விகிதம்:**

  **2 %** சதவீதப் புள்ளிகள் ↑ *(2021 செத்)*

- **வட்டி வீதங்கள் மீதான உச்சஎல்லை அகற்றப்பட்டது**

**துணைநில் வீத வீச்சு, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், நியதி ஒதுக்கு விகிதம்**




(அ) வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை செயற்படாத நாட்களில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் கிடைக்கப்பெறுவதில்லை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

# இறுக்கமான நாணயக் கொள்கைக்குப் பதிலிறுத்தும் விதத்தில், சந்தை வட்டி வீதங்கள் சில மாத காலப்பகுதிக்குள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தன...

## தெரிவுசெய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்குப் புறம்பாக, சந்தை வட்டி வீதங்கள் பின்வருவனவற்றின் மூலம் தூண்டப்பட்டன:**

1. அதிகரித்த இடர்நேர்வு மிகையினால் தூண்டப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் ஏற்பட்ட திடீர் உயர்வு
2. உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட பாரியதும் தொடர்ச்சியானதுமான திரவத்தன்மைப் பற்றாக்குறை

எனினும், மிகையான சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக குறைவடைந்து வருகின்றன...

[Limited Sharing]

# உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை எதிர்க்கணிய மட்டத்தில் தொடர்ந்துமிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதன் மூலம் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைக்கு ஆதரவளிக்கப்பட்டது...

**உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபாத் திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்(அ)**




(அ) வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தை செயற்படாத நாட்களில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் கிடைக்கப்பெறுவதில்லை

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**உயர்ந்த பணவீக்க வீதங்கள் காரணமாக இறுக்கமான நாணய நிலைமைகளைப் பேணுவதற்கான தேவை**

...நாணய மற்றும் நிதியியல் உறுதித்தன்மை இரண்டினையும் உறுதிப்படுத்துவதற்காக, மத்திய வங்கி மரபுவழி மற்றும் மரபுவழியற்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகளைப் பரந்த அடிப்படையில் பயனப்படுத்தியது...

- பாரியளவிலான சந்தை தலையீடுகள்
- துணைநில் வசதியின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன (துணைநில் வைப்பு வசதி: மாதமொன்றிற்கு < 5 தடவைகள், துணைநில் கடன்வழங்கல் வசதி: < நியதி ஒதுக்கு விகிதத்தில் 90%)
- கால நேர்மாற்று மீள்கொள்வனவு
- திரவத்தன்மை உதவி வசதியின் அறிமுகம்
- அவசரகால திரவத்தன்மை உதவி வசதி வலுப்படுத்தப்பட்டமை

# பல்வேறு துறைகள் மீது மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் மூலம் சென்மதி நிலுவை அழுத்தங்கள் கட்டுப்படுத்தப்பட்டன...

உயர்ந்த இறக்குமதிச் செலவினத்திலிருந்து தோன்றிய விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலின் அருந்தல்தன்மை காரணமாக இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய வழிமுறைகளைத் தேவைப்படுத்தியது

## இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் வர்த்தக மீதி




செலாவணி ரூபாவிற்கு மாற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுமதிப் பெறுகைகளைக் கண்காணிக்கும் முறைமை நிறுவப்பட்டது

நாணயக் கொள்கையை இறுக்கமாக்குதல்

**இறக்குமதிகளுக்கான குறிப்பிட்ட கொடுப்பனவு நியதிகளின் மீது கட்டுப்பாடுகள் (2022 மேயில்)**

- திறந்த கணக்குகள்
- கப்பற்சரக்கு கணக்குகள்
- ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள்
- கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்கள்

**அளவு வைப்புத் தேவைப்பாட்டின் அறிமுகம்**

- 2022 மேயில் 779 பொருட்கள்
- 2023 பெப்புருவரியில் 64 பொருட்கள்

**தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளைத் தற்காலிகமாக நிறுத்தியமை**

- 2022 ஓகத்தில் தற்காலிக நிறுத்தல் (1,400 இணங்குவிப்புக் குறியீடுகள்)
- 2022 செத்தெம்பர் – நவெம்பர் காலப்பகுதியில் தற்காலிக நிறுத்தலில் தளர்த்தல் முன்னெடுக்கப்பட்டது
- ஒன்றுசேர்ந்த தற்காலிக நிறுத்தல் (1,220 இணங்குவிப்புக் குறியீடுகள்)

[Limited Sharing]

# புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குப் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை மேம்படுத்துவதற்கு கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன...

**மேலதிக ஊக்குவிப்புத் திட்டங்கள்**

- "உள்முக தொழிலாளர் பணவனுப்பல் மீதான மேலதிக ஊக்குவிப்புத்" திட்டம் தொடர்ந்தமை

**கொடுக்கல்வாங்கல் செலவுகளை மீளவழங்குதல்**

- பணத்தினை அனுப்பும் போது ரூ.20,000 இற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்குமாக புலம்பெயர் தொழிலாளர்களினால் செலுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவில் ரூ.1,000 வரையிலான தொகையினை மீளச்செலுத்துவதற்கான திட்டம்

**லங்கா றெமிட்**

- முறைசார்ந்த பணவனுப்பல் மார்க்கங்கள் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காக தேசிய பணவனுப்பல் செல்லிடத் தொலைபேசிச் செயலியான "லங்கா றெமிட்" இனை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது

**தீர்வைச் சலுகைகள்**

- அலுவல்சார் மார்க்கங்களூடாக புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்குப் பணயத்தினை அனுப்புகின்ற தொகையினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக தீர்வைச் சலுகைகளும் மின்னியல் ஊர்தி இறக்குமதிகளுக்கான சலுகையும் வழங்கப்பட்டன

[Limited Sharing]

# 2021 மற்றும் 2022 ஆகிய இரு ஆண்டுகளிலும் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலை முகாமைப்படுத்துவதற்காக நடைமுறையிலிருந்த மூலதனப்பாய்ச்சல் வழிமுறைகள்...

| | |
|---|---|
| **வெளிமுக முதலீட்டுக் கணக்குகள்** | • வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினூடான (கலண்டர் ஆண்டொன்றிற்கு) வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது வரையறைகள்) |
| **வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள்** | • வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களின் மீது வரையறை |
| **புலம்பெயர் படிகள்** | • புலம்பெயர் படிகளின் கீழ் நிதிகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மீது வரையறை மற்றும் முதற்றடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான படிகள் மீது வரையறை |
| **தற்காலிக வதிவிட விசாவினை வைத்திருப்போர்** | • மற்றொரு நாட்டில் தற்காலிக வதிவிட விசாவினைப் பெற்றிருக்கின்ற தனிப்பட்ட எவரேனும் இலங்கையர்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்/ வெளிநாட்டுச் செலவாணி வழங்கல் மீதான வரையறை |

**வெளிமுகப் பணவனுப்பல்கள்**

2022இல் ஐ.அ.டொலர் 296 மில்லியன்

2021இல் ஐ.அ.டொலர் 270 மில்லியன்

2020இல் ஐ.அ.டொலர் 910 மில்லியன்

**பயண வெளிப்பாய்ச்சல்கள்**

2022இல் ஐ.அ.டொலர் 244 மில்லியன்

2021இல் ஐ.அ.டொலர் 239 மில்லியன்

2020இல் ஐ.அ.டொலர் 449 மில்லியன்

[Limited Sharing]

# அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியிட வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கியதன் மூலம் மக்களின் துயரங்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன...

## இலங்கை மத்திய வங்கியின் தலையீடு வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுகள் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2021 | 2022(அ) |
|---|---|---|
| **இலங்கை மத்திய வங்கி உள்ளீர்ப்பு** | **506** | **2,148** |
| தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 213 | 550 |
| ஏற்றுமதிப் பெறுகைகளுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 214 | 1,184 |
| சந்தையுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 79 | 68 |
| எரிபொருள் பட்டியல்களுக்கு நிதியிடல் | - | 68 |
| நிலக்கரி பட்டியல்களுக்கு நிதியிடல் | - | 278 |
| **இலங்கை மத்திய வங்கி நிரம்பல்** | **1,253** | **2,716** |
| **தேறிய உள்ளீர்ப்பு** | **-747** | **-568** |
| **வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (வட்டி + மூலதனம்)** | 6,836 | 3,237 |
| அரசாங்கம் (ஆ) | 6,354 | 3,077 |
| மத்திய வங்கி | 481 | 160 |
| **மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள்** | **3,139** | **1,898** |

(அ) தற்காலிகமானது
(ஆ) வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோர்களுக்கான வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**இவ்விடர்ப்பாடான காலப்பகுதியில் இலங்கையின் இருபுடை மற்றும் பல்புடை பங்காளர்களிடமிருந்து குறிப்பிடத்தக்களவு ஆதரவு பெறப்பட்டது:**

- எரிபொருள், வளமாக்கி மற்றும் மருந்து வகை போன்ற இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக அநேக மனிதாபிமான **இந்திய தொடர்க் கொடுகடன்கள்** வழங்கப்பட்டன.
- சீனாவிலிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதிக்குப் புறம்பாக, இந்திய மற்றும் வங்காளதேச மத்திய வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இருபுடை **பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள்** ஒதுக்குகளுக்கு உதவின
- இந்தியாவிலிருந்தான **ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய வசதியிலிருந்தான** பெறுகைகளும் படுகடன் தீர்ப்பனவிற்கும் இறக்குமதிக்கு நிதியிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது
- **உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும்** தொடர்ந்தும் நிதியியல் உதவிகளை வழங்கின

# செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி சந்தை வழிகாட்டல்களைத் தொடங்கியது...

**வழிகாட்டல் இடைவெளி அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் செலாவணி வீதம்**




**வழிகாட்டல் இடைவெளியினைச் சுற்றி செலாவணி வீதம் உறுதியடையத் தொடங்கியது...**




**தாக்கம்மிக்க செலாவணி வீதச் சுட்டெண்**
**24 நாணயம் (2017 = 100)**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

| | |
|---|---|
| **ஏற்றுமதிகள் மீதான தாக்கம்** | • நாணயத்தின் தேய்வு ஏற்றுமதிகளின் போட்டித்தன்மைக்கு ஆதரவாக அமைந்தது |
| **இறக்குமதிகள் மீதான தாக்கம்** | • பெரும்பாலான தேவையற்ற இறக்குமதிகள் தன்னியக்கமாகவே கட்டுப்படுத்தப்பட்டன |

# நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுவதற்காக ஒழுங்குவிதிகளை விடுத்தல் மற்றும் மேற்பார்வை அணுகுமுறையினை வலுப்படுத்தல் என்பன உள்ளிட்ட பல முன்மதியுடைய கொள்கைத் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன...

**உறுதித்தன்மையினைப் பேணுவதற்காக மத்திய வங்கி பின்வருவன உட்பட, வங்கிகளுக்கு பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது:**

- மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பிலிருந்து எடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டமை
- திரவத்தன்மைப் பாதுகாப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் என்பனவற்றிற்கான ஒழுங்குமறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமை
- இரண்டாண்டு காலப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான சந்தைப்படியான இழப்புக்களைத் தடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டமை
- குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறை ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குமான கால அவகாசம் நீடிக்கப்பட்டமை
- தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

நடுத்தர காலத்தில் வலுவானதும் உறுதியானதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை நிறுவுகின்ற குறிக்கோளுடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினை ஒன்றிணைப்பதற்கான முதன்மைத் திட்டம்

தொடர்ச்சியான சாதகமற்ற வியாபார நிலைமைகளின் காரணமாக, கடன் மீள்கொடுப்பனவுகள் மீது குறிப்பிட்ட துறைகளிலுள்ள பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் படுகடன் சட்ட இசைவுத்தாமதமும் சலுகைகளும் வழங்கப்பட்டன

**தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்கின்ற கொடுகடனின் தரம் திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், உயர்ந்த பெறுமதி இழப்புக்கள் காரணமாக ஏற்பட்ட குறைந்த மட்டத்திலான இலாபத்தன்மை மற்றும் எதிர்பாராத இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்கான மூலதன தாங்கிருப்புக்கள் தேய்வடைந்தமை போன்றவற்றினால் தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் நிதியியல் துறையில் உறுதிப்பாடு பேணப்பட்டது.**

2022இல் இறைத் துறை **அழுத்தங்கள்** அதிகரித்தமையின் காரணமாக அரசாங்கமானது தனிச்சிறப்பு வாய்ந்த இறைச் சீர்திருத்தங்களையும் கொள்கை வழிமுறைகளையும் **முன்கூட்டியே** மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் இது **நம்பிக்கையினையும் உறுதித்தன்மையினையும்** மீண்டும் அடைந்து கொள்ளப்படுவதனை இலக்காகக் கொண்டிருந்தன....

**ப.நா.நிதியத்திடமிருந்து** உதவியினைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் அரசாங்கம் 2022இன் தொடக்கத்தில் வழிமுறைகளை முன்னெடுத்தது...

அத்துடன் 2022 ஏப்பிறல் நடுப்பகுதியில் **படுகடன் தற்காலிக இடைநிறுத்தம்** பற்றி அறிவிக்கப்பட்டது...

# முக்கியமான அரசிறையினை அதிகரிப்பதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் வலுவான இறைத்திரட்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது...

## அரசிறை அதிகரிப்பு

- பெறுமதி சேர் வரி/ திருத்தப்பட்டது/ உயர்த்தப்பட்டது
- ஒரேநேர மிகைக் கட்டண வரி 25%
- ரெலிகொம் தீர்வை 15% இற்கு அதிகரிக்கப் பட்டது
- சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வை விதிக்கப்பட்டது (மொத்தப் புரள்வில் 2.5%)
- வரித் தளம் விரிவாக்கப் பட்டது
- கம்பனி மற்றும் தனிநபர் வரி அமைப்பு திருத்தப்பட்டது
- பிடித்துவைத்தல் வரி மீள அறிமுகப்படுத்தப் பட்டது
- பெறுமதிசேர் வரி விலக்கல்கள் நீக்கப்பட்டன
- பெற்றோல், டீசல், சிகரெட் மற்றும் குடிவகை மீதான கலால் வரிகள் திருத்தப்பட்டன

## செலவினைச் சிக்கனப்படுத்தல்

- மின்வலு மற்றும் எரிபொருள் பயன்பாட்டினை குறைப்பதற்காக வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன
- அவசரமல்லா/ அத்தியவசியமல்லா செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரச துறைக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன
- 2023ஆம் ஆண்டிற்கான அனைத்து அரச நிறுவனங்களினதும் ஒப்புதலளிக்கப்பட்ட மீண்டெழும் செலவின மதிப்பீடுகளில் 6 சதவீதத்தைக் குறைப்பதற்கு அமைச்சரவையின் ஒப்புதல்
- முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்கள் (இ.பெ.கூ/இ.மி.சபை)
- செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் சூத்திரம்
- அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சி மறுசீரமைத்தல் அலகு
- இலங்கை மின்னியல் சட்டத்தைத் திருத்தல்

இவ்வழிமுறைகளைப் பரிசீலனையில் கொள்கையில் 2022ஆம் ஆண்டிற்கான இறை இலக்குகள் இடைக்கால வரவு செலவுத்திட்டம் - 2022இன்படி திருத்தப்பட்டன



[Limited Sharing]

# 2022 ஏப்பிறல் 12 இலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது பற்றி அரசாங்கம் அறிவித்ததுடன் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகள் முன்னெடுக்கப்பட்டன...

**நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் குறைக்கப்பட்டது**

| | எஸ் அன்ட் பி | பிட்ச் | மூடிஸ் |
|---|---|---|---|
| 2019 முடிவில் | B (S) | B (N) | B2 (S) |
| 2020 முடிவில் | CCC(+)(S) | CCC | Caa1 (S) |
| 2021 முடிவில் | CCC+(N) | CC | Caa2 (S) |
| 2022 முடிவில் | SD | RD | Ca (S) |

பன்னாட்டுத் தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டமையானது வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவைப்பட்ட வெளிநாட்டு நிதியிடலைத் திரட்டுவதில் அரசாங்கத்திற்கு பயங்கரமான சவால்களைத் தோற்றுத்தது

வெளிநாட்டு நிதியிடலை அணுகும் தன்மை போதாமல் இருப்பது மற்றும் பயன்படுத்தத்தக்க அலுவல்சார் ஒதுக்குகள் 2022 தொடக்கத்தில் கிட்டத்தட்ட பூச்சிய மட்டத்திற்கு குறைவடைந்தமை என்பன அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவிற்கு இடையூறாக அமைந்தன




**2022 ஏப்பிறலிலிருந்து திசெம்பர் வரையான** காலப்பகுதியில் இருபுடை மற்றும் வர்த்தக படுகடன்கள் இடைநிறுத்தப்பட்டமையினூடாக கிடைத்த வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களின் **மதிப்பிடப்பட்ட சேமிப்பு ஐ.அ.டொலர் 2.8 பில்லியனாகக்** காணப்பட்டது

[Limited Sharing]

# வலு மற்றும் சக்தித் துறையில் பாதிக்கப்படும்தன்மைகள் அதிகரித்து வருகின்றமையானது, உடனடியானதும் தீர்க்கமானதுமான நடவடிக்கைகளைத் தேவைப்படுத்துகிறது…

- உலகளாவிய விலை அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2022 சனவரியிலிருந்து உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளை பல சுற்றுக்களில் **மேல்நோக்கித்** திருத்தியது…

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்**




*மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்*

- **அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கு மேலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன**
  - *இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியிய ஆற்றலை மேம்படுத்தும் வழிமுறையொன்றாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரச உத்தரவாதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்பான **ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் அரச** ஐந்தொகைக்கு **மாற்றப்பட்டது***
  - *மேலும், **இலங்கை மின்சார சபையின் ரூ.146.6 பில்லியன்** கொண்ட **பொறுப்புக்களும் அரசாங்கத்திற்கு மாற்றல்** செய்யப்பட்டன*

ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் எதிர்பார்க்கப்பட்ட **பெறுபேறுகளை** வழங்கியிருக்கின்ற அதேவேளையில் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வரை நடைமுறைக்குச் **சாத்தியமான சமநிலையினை** எய்துவதற்கான உதவிகள் ஆரம்பிக்கப்பட்டன...

# சீராக்கக் கொள்கை வழிமுறைகள் செலவுமிக்கதும் வலி நிறைந்தவையாகவும் இருக்குமெனினும் அவையில்லையெனில் நெருக்கடிகள் மேலும் தீவிரமடைந்து அதன் காரணமாக மக்களினதும் வியாபாரங்களினதும் துயரம் நீண்டு கொண்டு சென்றிருக்கக்கூடும்...



# பணவீக்கமானது பணவீக்க வீழ்ச்சிப் பாதைக்கு மிக விரைவாக திரும்பியிருக்கிறது...

முதன்மைப் பணவீக்கம்(ஆண்டிற்கு ஆண்டு)[அ]




(அ) தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் 2023 பெப்புருவரியில் வெளியிடப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி புதிய அடிப்படை ஆண்டுடனான, 2021=100, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை வெளியிடத் தொடங்கியதுடன், 2013=100 பழைய அடிப்படை ஆண்டுடனான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை வெளியிடுவதனை நிறுத்தியது. இதன்படி, வரைபடத்தில் 2023 சனவரி தொடக்கம் தரவுகள் 2021=100 புதிய அடிப்படை ஆண்டுடன் கூடிய தொடர்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**நாணயக் கொள்கை இறுக்கமாக்கலின் காலம் கடந்த தாக்கங்கள்** காரணமாக கேள்வி அழுத்தங்கள் தளர்த்தப்பட்டமை அதேபோன்று **உணவு மற்றும் வலு மீதான பணவீக்கம் மெதுவடைந்தமை** என்பன முதன்மைப் பணவீக்கம் 2022இன் பிற்பகுதியிலிருந்து குறைவடையக் காரணமாயின....

| ஆண்டிற்கு ஆண்டு (கொநுவிசு) | திசெ 2021 | செத் 2022 | ஏப் 2023 |
|---|---|---|---|
| முதன்மை | 12.1% | 69.8% | 35.3% |
| மையம் | 8.3% | 50.2% | 27.8% |
| உணவு | 22.1% | 94.9% | 30.6% |
| உணவல்லாதது | 7.5% | 57.6% | 37.6% |

உயர்ந்த வட்டி வீதச் சூழல் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் விரிவாக்கத்தினைத் தளர்வுறச் செய்ததுடன் இது பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமாக இருந்தது...

எனினும், அரசிற்கான தேறிய கொடுகடன் தொடர்ந்தும் உயர்வாக விளங்கி, படுகடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை மற்றும் உயர்ந்த இடர்நேர்வு மிகை என்பனவற்றின் கீழ் காணப்பட்ட அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் அழுத்தத்தினைப் பிரதிபலித்தது...

## உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட மாதாந்த மாற்றம்[(அ)]




(அ) 2022 மாச்சு – மே காலப்பகுதியில், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது இக்காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்குப் பங்களித்தது

## 2022 காலப்பகுதியில் உள்நாட்டுக் கொடுகடனின் ஆண்டுக்கான மாற்றம்



# அரசிற்கான தேறிய கொடுகடன் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கிடையிலும் தனியார் துறைக்கான கொடுகடன் கணிசமாக சுருக்கமடைந்தமையின் தூண்டுதலினாலும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் நாணய விரிவாக்கம் மெதுவடைந்தது...

## விரிந்த பணத்தில் ஏற்பட்ட ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு - $M_{2b}$ (சொத்துப் பக்கம்) (அ)




அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## நாணயக் கூட்டுக்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி (அ)




அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

| ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி | 2021இறுதியில் | 2022 ஏப் | 2022 இறுதியில் |
|---|---|---|---|
| $M_{2b}$ | 13.2% | 20.0% | 15.4% |
| தனியார் துறைக் கொடுகடன் | 13.1% | 20.3% | 6.2% |

[Limited Sharing]

# வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்புடன் வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்கள் பாரியளவிற்கு குறைக்கப்பட்டன...

### இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது

**இறக்குமதிகள்**




| இறக்குமதி வகை | பெறுமதி (ஐ.அ.டொலர் மில்) | | வளர்ச்சி % |
|---|---|---|---|
| | 2021 | 2022 | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,848.7** | **2,813.0** | **-26.9** |
| *உணவு மற்றும் குடிபானங்கள்* | *1,666.5* | *1,607.9* | *-3.5* |
| *உணவல்லா நுகர்வுப் பொருட்கள்* | *2,182.2* | *1,205.1* | *-44.8* |
| இடைநிலைப் பொருட்கள் | 12,308.9 | 12,438.8 | 1.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,462.7** | **3,030.5** | **-32.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **20,637.4** | **18,291.0** | **-11.4** |

### வணிகப்பொருள் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடியனவாக இருந்தன

**ஏற்றுமதிகள்**




| ஏற்றுமதி வகை | பெறுமதி (ஐ.அ.டொலர் மில்) | | வளர்ச்சி % |
|---|---|---|---|
| | 2021 | 2022 | |
| **கைத்தொழில் பொருட்கள்** | **9,702.0** | **10,465.3** | **7.9** |
| வேளாண்மைப் பொருட்கள் | 2,729.5 | 2,568.0 | -5.9 |
| கனிப்பொருட்கள் | 44.5 | 50.0 | 12.3 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **12,498.6** | **13,106.4** | **4.9** |

### வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது

**வர்த்தக மீதி**



# விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான பன்னாட்டு நாணய நிதிய சபையின் ஒப்புதல் பொருளாதாரத்தின் நம்பிக்கையினை பேணிப் பாதுகாப்பதாக இருந்தது...

**அலுவலர் மட்டத்திலான உடன்படிக்கை**

அலுவலர் மட்டத்திலான உடன்படிக்கை **2022 செத்தெம்பரில்** எட்டப்பட்டது

**ப.நா.நிதிய சபையின் ஒப்புதல் மற்றும் முதல் தொகுதி**

அலுவல்சார் கடன் வழங்குவோரிடமிருந்து நிதியியல் உத்தரவாதம் பெறப்பட்டமையினைத் தொடர்ந்து விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கு **2023 மாச்சில்** ஒப்புதல் வழங்கப்பட்டது

**பல்புடை கொடுகடன் வழங்குவோரிடமிருந்து நிதியியல் ஆதரவு**

**உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஐ.அ.டொலர் 1.5 பில்லியனிற்கு** மேற்பட்ட தொகையினை 2023இல் விதிவிலக்கான நிதியிடல் ஆதரவாக வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது

**முதலீட்டாளர் மனோபாவம் படிப்படியாக பழைய நிலைக்கு கொண்டு வரப்படுகிறது**

அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றிற்கான படிப்படியான உட்பாய்ச்சல்கள் காரணமாக **முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பட்டு வருகின்றது**

**அனுமதியளிக்கப்பட்ட மொத்தப் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதித் தொகை**

**சி.எ.உ. 2.3 பில்**

ஏறத்தாழ ஐ.அ.டொ 3 பில்

| | |
|---|---|
| முன்கூட்டிய நடவடிக்கைகள் | 09 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 18 |
| கணியம்சார் செயலாற்றுப் பிரமாணம் | 04 |
| குறிகாட்டி இலக்குகள் | 04 |
| நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள் | 01 |

# மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ந்தும் மேம்பட்டு வருகின்றவேளையில் செலாவணி வீதம் சந்தை சக்திகளினால் நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது…

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்




## ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் அசைவு




**2023இல் சென்மதி நிலுவைக்கான உட்பாய்ச்சல்கள்**

**அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள்**

ஏறத்தாழ **ஐ.அ.டொலர் 250 மில்**
2023 சன-ஏப்

**மத்திய வங்கியின் தேறிய ஈர்ப்பு**

ஏறத்தாழ **ஐ.அ.டொலர் 1.1 பில்**
2023 சன-ஏப்

**ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் முதல் தொகை**

ஏறத்தாழ **ஐ.அ.டொலர் 333 மில்**
2023 மாச்சு

[Limited Sharing]

# தொழிலாளர் பணவனுப்பல்களும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் அதிகரித்துவரும் போக்கினைக் காட்டுகின்றன...

## தொழிலாளர் பணவனுப்பல்கள்




**2022 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 205 மில்லியனைப்** பதிவுசெய்த **தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023 மாச்சில் ஐ.அ.டொலர் 568 மில்லியனுக்கு** அதிகரித்தது

## சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




**2022இல்** சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் **மாதாந்தச் சராசரியான ஏறத்தாழ 60,000** உடன் ஒப்பிடுகையில், **2023இன் இதுவரையிலான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மாதாந்தச் சராசரி ஏறத்தாழ 110,000** ஆகக் காணப்பட்டது

[Limited Sharing]

# சிராக்கக் கொள்கை வழிமுறைகள் இறைத் துறைச் செயலாற்றம் மோசமடைவதனைக் கட்டுப்படுத்துவதற்கு உதவின...

**முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தியின் %)**




- **2022இல் அனைத்து முக்கிய இறை நிலுவைகளும் (மொ.உ.உற்பத்தியின் %) மேம்பட்டன:**

| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஆரம்ப நிலுவை | ஒட்டுமொத்த இறை நிலுவை |
|---|---|---|
| 6.4% ▼ | 3.7% ▼ | 10.2% ▼ |
| 2021: 7.3% | 2021: 5.7% | 2021: 11.7% |

**மத்திய அரசின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் (மொ.உ.உற்பத்தி %)**




- **இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் இடைநிறுத்தம்** வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களின் கணிசமான தொகையினைச் சேமிப்பதற்கு **அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தியமையானது,** சென்மதி நிலுவை நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்காலிக ஆறுதலொன்றினை வழங்கியது.

| உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் (ரூ.பில்) | வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் (ரூ.பில்) |
|---|---|
| 2,510 ▲ | 487 ▼ |
| 2021: 1,594 | 2021: 786 |

[Limited Sharing]

# நீண்ட காலமாக தாமதமடைந்த சீர்திருத்தங்களுடன் இணைந்து பொதுப் பயன்பாடுகளுக்காக செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் உபாயங்களை ஆரம்பித்தமையானது, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மை மேம்பட உதவியது...

விலைச் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீதம் படிப்படியாக உறுதியடைந்தமை என்பனவற்றுடன் இணைந்ததாக 2022 **யூலையிலிருந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்த அடிப்படையில் இலாபத்தினை (வரிகளுக்கு முன்னர்) தொடர்ச்சியாகப் பதிவுசெய்தது**

மின்வலுத் தீர்வைகளுக்கான மேல் நோக்கிய திருத்தங்களுடன் இணைந்ததாக காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் பகுதியளவு காரணமாக **இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு இழப்பு** 2022 **ஓகத்திலிருந்து மிதமடைந்தது**

***இணங்காணப்பட்ட பொறுப்புக்கள் மத்திய அரசிற்கு மாற்றல் செய்யப்பட்டமையுடன் இலங்கை மின்சார சபையினதும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் நீண்ட காலப் படுகடன் சுமை குறிப்பிடத்தக்களவிற்குத் தளர்த்தப்பட்டது...***

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் இறக்குமதி உண்டியல்கள்**




**இலங்கை மின்சார சபை**
**நீண்ட காலப் பொறுப்புக்கள்**




**பெற்றோலிய துறைச் சீர்திருத்தங்கள்:**

- **செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சூத்திரத்தின்** அறிமுகம்
- **இலங்கை பெற்றோலிய உற்பத்திகள் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்** இயற்றப்பட்டமை
- **போட்டித்தன்மை வாய்ந்த** உள்நாட்டுப் பெற்றோலிய சந்தை

**மின்வலுத் துறைச் சீர்திருத்தங்கள்:**

- இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பிற்கு வசதியளிப்பதற்காக **வழிமுறைகள் முன்னேற்றம்** கண்டு வருகின்றன
- **2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்வலுச் சட்டம்** 2022 யூனில் திருத்தப்பட்டது
- அரையாண்டுச் செலவு மீட்சியை அடிப்படையாகக் கொண்ட **மின்வலுத் தீர்வை சீராக்கப் பொறிமுறை**

[Limited Sharing]

# பாதிக்கப்படக்கூடிய வீட்டுத்துறையினரின் சமூகப் பொருளாதார நலனோம்புகைகளை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் தற்போதுள்ள பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தியது...

**சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் குடும்ப அலகுக் கொடுப்பனவுக்கான திருத்தம்**

| | |
|---|---|
| ரூ.3,500.00 | ரூ.4,500.00 |
| ரூ.2,500.00 | ரூ.3,200.00 |
| ரூ.1,500.00 | ரூ.1,900.00 |

**சமுர்த்தி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் காசு மாற்றல் நிகழ்ச்சித்திட்டம்**

(1.7 மில்லியன் பயன்பெறும் குடும்பங்களையும் ஏனைய வகை பயன்பெறுநர்களையும் உள்ளடக்குகின்றது)

**ரூ.120 பில்**

**2022 பெப்புருவரியிலிருந்து பயன்பெறும் குடும்பமொன்றிற்கான சமுர்த்திக் கொடுப்பனவின் சராசரி அதிகரிப்பு**

**28%**

**ரூ.3,000 - ரூ.5,000 கொண்ட அவசரகால காசு மாற்றல் நிகழ்ச்சித்திட்டம்**

(சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோய் உதவுதொகைத் திட்டங்கள் போன்றவற்றின் கீழ் சமுர்த்தி பயன்பெறுநர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலிலுள்ள பயன்பெறுநர்கள்)

**ரூ.38.5 பில்** (உலக வங்கி)

**ரூ.45.5 பில்** (ஆசிய அபிவிருத்தி வங்கி)

**"ஒருவரையும் பின்தங்கவிடக்கூடாது" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக பதிவகமொன்றினை நிறுவுவது விரைவுபடுத்தப்படுகிறது**

*பின்வருவனவற்றிற்கு திட்டமிடப்பட்டது*

- *நலன்புரி நன்மைகள் தகவல் முறைமையொன்றினை நிறுவுதல்*
- *ஒருங்கிணைக்கப்பட்ட நலன்புரி முகாமைத்துவ முறைமையொன்றினை அபிவிருத்தி செய்தல்*

# நடுத்தர காலத் தோற்றப்பாடு

இங்கு காட்டப்பட்டுள்ள நடுத்தர காலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பானது, 2023 செத்தெம்பர் இறுதிக்கு முன்னராக **படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையினைப்** பூர்த்திசெய்தல் உட்பட, **ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஆதரவுத் திட்டத்தினை** வெற்றிகரமாகத் தொடருகின்ற கருதுகோளுடன்கூடிய **கொள்கை விபரணங்களையும்** அதன் காரணமாக பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து மேலதிக உதவி கிடைப்பதனையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

[Limited Sharing]

# 2023இன் விரைவான பணவீக்க வீழ்ச்சியினைத் தொடர்ந்து, பணவீக்கம் நடுத்தர காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டங்களில் உறுதித்தன்மையினை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது...

**இதற்கு உதவியாக பின்வருவன காணப்படுகின்றன**

- இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகளின் காரணமாக குறைவடைந்த மொத்தக் கேள்வி
- உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டு ரீதியாகவும் நிரம்பல் தடைகள் தணிக்கப்பட்டமை
- சாதகமான புள்ளிவிபரவியல் தளத்தாக்கம்

**உத்வேகம் மற்றும் தளத் தாக்கம் (கொ.நு.வி.சு, 2021=100)**




**மத்திய வங்கி, தற்போது நிலவுகின்ற உயர் பணவீக்கத்தினை 2023இன் பின்பகுதியில் ஒற்றை இலக்க மட்டங்களிற்குக் குறைப்பதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது**

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**
**(கொ.நு.வி.சு*, காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %)**




*...எனினும், நீடித்துநிலைத்திருக்கக்கூடிய விதத்தில் வலுப்படுத்தப்பட்ட இறை மற்றும் வெளிநாட்டு தாங்கிருப்புக்களுக்கான முயற்சிகள் மற்றும் பொருளாதார உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்துவதற்கான உத்தேச அமைப்பியல் சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுதல் என்பவற்றுடன் இணைந்ததாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாகத் தொடர்தல் நடுத்தர காலப்பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தொடர்ந்தும் உதவியாக இருக்கும்...*

# நடுத்தர காலப்பகுதியில், இலங்கையின் பொருளாதாரம் 2022இல் அதன் ஆழம் நிறைந்த பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து படிப்படியாக மீண்டெழும் என எதிர்பார்க்கப்படுகிறது...

- **பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் உறுதித்தன்மை, அண்மைக் காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் பொருளாதாரம் மீட்சியுறுவதற்கு பக்கபலமாக அமையுமெனவும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் உள்ளார்ந்த மட்டத்தை எய்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது**

உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்கு ஆண்டு)




முதலீடு மற்றும் சேமிப்புக்கள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




**நடுத்தர கால வளர்ச்சிக்கு பின்வருவன வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது:**

- கொழும்பு துறைமுக நகரம், கொழும்பு மேற்கு கொள்கலன் முனைக்கோடி மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற கைத்தொழில் வலயங்கள் என்பனவற்றிற்கு எதிர்பார்க்கப்பட்ட படுகடனை உருவாக்காத நிதியியல் உட்பாய்ச்சல்கள்
- சுற்றுலாக் கைத்தொழிலில் முதலீடுகள்
- முதலீட்டுச் சபையின் கீழ் நிறுவப்பட்ட முதலீட்டாளர் வசதிப்படுத்தல் மையமும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுகளை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

[Limited Sharing]

# வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடு தொடர்ந்தும் சாதகமாக காணப்படுகிறது, ப.நா.நிதிய – விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது நீடித்த உத்வேகத்திற்கு இன்றியமையாததாகும்...

## ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக மீதி




ஏற்றுமதிகளின் வளர்ச்சி இறக்குமதிகளின் வளர்ச்சியை விஞ்சுமென எதிர்பார்க்கப்படுவதனால் **வர்த்தகப் பற்றாக்குறை நடுத்தர காலப்பகுதியில் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது**

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி




நடுத்தர காலப்பகுதியில் **வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை** நீடித்து நிலைத்திருக்கக்கூடிய தாழ்ந்த மட்டமொன்றிற்குப் **படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது**

[Limited Sharing]

# இறைத் துறை தோற்றப்பாடு...

## அரச அரசிறை மற்றும் செலவினம்




## முக்கிய இறை நிலுவைகள்




2022இலும் 2023இன் தொடக்கத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறையை அதிகரிக்கின்ற வழிமுறைகள் அண்மிய காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதியில் நன்மைகளை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை இலக்குகளை எய்துவதற்கு **அரசிறை நிருவாக வழிமுறைகளை வலுப்படுத்துவதும் மிக முக்கியமானதாகும்**

நடுத்தர காலத்தில் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு **அரச துறை ஆட்சேர்ப்பினை மட்டுப்படுத்துவது, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினைச் சிறந்த முறையில் இலக்கிடுவது மற்றும் மூலதனச் செலவினத்தினை முன்னுரிமைப்படுத்துவது உள்ளிட்ட மீண்டெழும் செலவினங்களை கட்டுப்படுத்துவது அவசியமாகும்**

# பொதுப்படுகடனின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார உறுதிப்பாட்டினை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையினை வெற்றிகரமாக நிறைவுசெய்வது மிக முக்கியமானதாகும்...




- தற்பொழுது இடம்பெற்றுவரும் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவுசெய்வது அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுச் சுமையினை குறிப்பிடத்தக்களவிற்குக் குறைக்குமெனவும் **ஆண்டு மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் 2027 – 2032 காலப்பகுதியில் சராசரியாக மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்திற்குக் கீழே மட்டுப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது**

- 2027 – 2032 காலப்பகுதியின் எந்தவொரு ஆண்டிலும் **மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுகள் மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் கீழே பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது**

- **பொதுப்படுகடனை** 2032 அளவில் **மொ.உ.உற்பத்தியின் 95 சதவீதத்திற்குக்* கீழே குறைப்பதற்கு** எதிர்பார்க்கப்படுகிறது

*ப.நா.நிதியத்தின் படுகடன் அளவீடுகளின் படி மொ.உ.உற்பத்தியில் பொதுப்படுகடன் அளவிடப்படுகின்றது

# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்

- ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் அபிவிருத்தியடைந்து வருகின்ற உலகின் **மிகுந்த நம்பிக்கையூட்டுகின்ற** நாடுகளிலொன்றாக விளங்கிய இந்நாட்டினை, உறுதியான சமூகப் பொருளாதார **முன்னேற்றத்தினையும் சுபீட்சத்தினையும்** நோக்கி வழிநடத்திச் செல்வதற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டமையின் காரணமாக இன்று இத்தேசம் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு **கடுமையாகப் போராட** வேண்டியிருக்கிறது.

- சுதந்திரம் பெறப்பட்டதற்குப் பின்னர் அநேக முன்முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் வலுவானதும் நிலையானதுமான **தேசிய கொள்கைக் கட்டமைப்பொன்று** இல்லாமையின் காரணமாக வளம்பெறுவதில் இடர்ப்பாடுகளைக் எதிர்நோக்கியமையின் விளைவாக மோசமான பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம் **விடாப்பிடியான இரட்டைப் பற்றாக்குறைகள்** என்பனவற்றைத் தோற்றுவித்து வழிவழியாக வந்த பிரச்சனைகளையும் வளர்ச்சி, நெகிழ்வுத்திறன் மற்றும் மாற்றத்திற்குள்ளாகும் தன்மை குறைவாக இருத்தல் என்பனவற்றைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாக முன்னேற்ற வேகத்தினைக் குறைவடையச் செய்ததன் மூலம் மிக அண்மிய தசாப்தங்களில் குறிப்பாக, அயல் பொருளாதாரங்களை விட மிக அதிகளவிற்கு பின்தங்கச் செய்துவிட்டது

- இச்சவால்களில் பெரும்பாலானவற்றையும் நீண்ட காலப் பிரச்சனைகளையும் வெற்றி கொள்வதற்கு **கொள்கை வகுப்போரும் தொடர்பான அதிகாரிகளும்** அவசியமான சீர்திருத்தங்களை **நடைமுறைக்கிடுவது** தொடர்பில் அவசரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

- மிக முக்கியமாக, நெருக்கடியானது அமைப்பியல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாற்றங்களையும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான பல **வாய்ப்புக்களைக்** காட்டுகிறது.




நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் பொருளாதாரத்தினை வடிவமைப்பதில் **நீண்ட காலமாகத் தேவைப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய** கடப்பாடுகளைக் கொண்டிருப்பது மிக இன்றியமையாததாகும்

மறுசீரமைப்பிற்கு பின்னரான காலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் உறுதித்தன்மைக்காக **வெளிநாட்டு நிதியிடலைக்** காத்திரமான முறையில் **முன்னுரிமைப்படுத்தி பயன்படுத்துதல்**

ப.நா.நிதியம்-விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறிப்பிடப்பட்ட படுகடன் உறுதிப்படுத்தல் இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் **படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல்**

**நட்டத்தில் இயங்கும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பிற்கு நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்கள்**

எதிர்பார்க்கப்பட்ட அரசிறை இலக்குகளை எய்துவதற்கு **நிலையான வரி விதிப்புக் கொள்கைகள் இல்லாமையானது வரி நிருவாகத்தினையும் சட்ட ரீதியான இணங்குவிப்புக் கட்டமைப்பினையும் மேம்படுத்துவதற்கான தேவையை ஏற்படுத்தியது**

நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் **நீடித்துநிலைத்திருக்கும் இறைத்திரட்சிக்கு வினைத்திறன்மிக்க செலவின சிக்கனப்படுத்தல் உபாயங்கள்** அவசியமாகும்




**நாட்டின் வலுப் பாதுகாப்பின்மை**

**அரச செலவின முகாமைத்துவத்தின் மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கு நிறுவன ரீதியானதும் சட்டபூர்வமானதுமான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன**

ஏற்றுமதித் துறைக் கொள்கைகள் பொருட்கள் மற்றும் பணிகளின் **நவீனமயப்படுத்தலை மேம்படுத்துவதன் மீது** கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்

**தேசிய வர்த்தகக் கொள்கையில்** கணிசமானளவு **மறுசீராக்கங்களினூடாக** நாட்டினைக் கூடியளவு ஏற்றுமதி சார்ந்த நாடாக மாற்றுவதற்கு அமைப்பியல் சீராக்கங்கள் தேவைப்படுகின்றன

கடந்த சில தசாப்தங்களாக காணப்படும் குறைந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பரிசீலனையில் கொண்டு **பொருளாதார மீளெழுச்சிக்காக பொறுப்புக்களை உருவாக்காத முதலீடுகளைக் கண்டறிவது மிக முக்கியமானதாகும்**

**சுற்றுலா வருகைகளைக் கவர்ந்து கொள்வதற்கு** சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும் பொருத்தமான வலையமைப்பும் அவசியமாகின்றன




**தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் பாரிய புலம்பெயர்வு உற்பத்தியாக்கத்தின் கணிசமான வீழ்ச்சிக்கு வழிவகுக்கின்றது**

ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்காக **சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையினை மேம்படுத்தி புத்துயிரளித்தல்** முக்கியமானதாகும்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் **உள்நாட்டு விலைகளில் காணப்படும் கீழ்நோக்கிய நெகிழ்ச்சியற்றதன்மையானது** உள்நாட்டு வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதில் தொடர்ந்தும் கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது

**மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுவினரின் நலன்புரியினை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை உபாயங்களை மீளவடிவமைப்பது அவசர தேவையாகவுள்ளது**

வலுவான மீட்சி மற்றும் வளர்ச்சி என்பனவற்றின் பொருட்டு **தேசிய கொள்கைத் திட்டமிடல் பொறிமுறையினையும் முழுமையான நடைமுறைப்படுத்தலையும்** வலுப்படுத்துவது அவசியமாகிறது

**வங்கித்தொழில் துறையின் மீது அரச துறை தங்கியிருப்பது** கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வருகிறது

உள்நாட்டு வேளாண்மைத் துறையில் காணப்படும் முரண்பாடான கொள்கைகள்

நீண்ட காலமாகத் தேவைப்படும் காரணிச் சந்தை சீர்திருத்தங்கள்

பொருளாதாரத்தினை விரைந்து டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்ந்து இன்றியமையாததாக காணப்படுகின்றது

நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு சூழலைப் பேணிப் பாதுகாப்பது மீது உரிய கவனத்தினைச் செலுத்துவது இன்றியமையாததாகும்

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீட்சி மிகத் தேவையான சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்வதில் தங்கியிருக்கிறது

1. இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறை

2. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டம்

3. ‘இலங்கை மத்திய வங்கி சட்டத்தின்’ சிறப்புக்கூறுகள்

4. தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்

5. இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட சிறுவர் ஊட்டச்சத்துக் குறைப்பாட்டிற்கெதிராகப் போராடுதல்

6. நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை 2021ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்

7. ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதையும் மாற்றுவதையும் கண்காணித்தல்

8. வெளிநாட்டுத் துறை மீதியை வலுப்படுத்துவதற்கான பிந்தைய படுகடன் மறுசீரமைப்பு கொள்கை முன்னுரிமைகள்

9. ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் நெருக்கடியைத் தடுப்பதிலும் வங்கித்தொழில் துறையில் பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டமைப்பதிலும் மத்திய வங்கிகளின் வகிபாகம்

10. இலங்கையில் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையொன்றினை நிறுவுதல்

11. நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அழுத்தமிகு காலப்பகுதியில் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மத்திய வங்கியின் தலையீடு

12. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு: ஒரு முன்னோக்கிய பாதை

13. இலங்கையில் நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்தல்

14. முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்






# நன்றி